
'ஈழமணி' ஆசிரியர்

# க. க. முருகேசபிள்ளை நினைவுமலர்



"ஈழமணி" ஆசிரியர்

திரு. க. க. முருகேசபிள்ளை

# நினைவுமலர்



★

வெளியிட்டோர் :

மு. கணபதிப்பிள்ளை

தென்புலோலியூர்,
பருத்தித்துறை,
இலங்கை.

முதற் பதிப்பு
30-12-1956.



ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை-5.

# "கண் கண்ட தெய்வம்"

---

இளமைப் பருவத்திலேயே எனக்கு "அ" சொல்லி, படிப்படியாக நீதி நூல்களையும் இலக்கியங்களையும் கற்பித்து, சமய அறிவைப் புகட்டி, என் உள்ளத்திலே தமிழுணர்ச்சியை ஊட்டி வைத்தவர் எனது அருமைத் தந்தையார். இளமைக் காலத்திலேயே அவர் எனக்குக் கற்பித்த "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற முதுமொழி இன்றும் என் மனத்திற் சிலைமேல் எழுத்தாய் உள்ளது. தெய்வமோ கடவுளோ இதுவரை எனக்குக் காட்சி யளித்ததில்லை; தெய்வத்தையோ கடவுளையோ என் கண் கண்டதுமில்லை. ஆகவே, எனது அருமைத் தந்தையாரே எனக்கு"கண் கண்ட தெய்வம்."

எனது "கண் கண்ட தெய்வம்" புரிந்த தொண்டுகளைப் பற்பல துறைகளிலே கண்டுணர்ந்தோர் கூறியனவற்றை நினைவுகொள்ளுவதற்கு இது ஒரு மலர்; நினைவு மலர். எனது அருமைத் தந்தையாரின் நண்பர்களும் மாணவர்களும் தொகுத்தவற்றுள் ஒரு சிறு பகுதி இது.

மு. கணபதிப்பிள்ளை

'ஈழமணி' யின் ஆசிரியராக விளங்கிய
திரு. க. க. முருகேச பிள்ளை அவர்களின்

## நினைவுமலருக்கு வாழ்த்து

(ஆஸ்தானப் புலவர், நாமக்கல் வே. இராமலிங்கம்பிள்ளை)

அன்புவழி இன்னதென அறியச்செய்து,
அருள்பெருக்கி ஆன்மாவிற் கமைதிகூட்டி,
இன்பமிக இல்லறத்தை நடத்திவாழ
இணையற்ற அறநெறியை இசைப்பதாகித்
துன்பமுற்ற எவ்வுயிர்க்கும் துணையாய்நின்று
துயர்நீக்கத் துடிதுடிக்கும் தொண்டனாகத்
தென்புதரும் தமிழ்மொழியின் புலமைமிக்குத்
திகழ்ந்தவனும் முருகேசம் பிள்ளைச்செம்மல். 1

ஆழமிகும் தமிழறிவை ஆய்ந்துசொல்லி
அங்கிருக்கும் தமிழர்களின் ஆக்கத்திற்கே
'ஈழமணி' தோற்றுவித்து இனிதுகூறி
இலங்கைவாழ் தமிழினங்கள் ஏற்றம்பெற்று
வாழவழி வகுத்துரைத்த வண்மையாளன்
வாய்மையுடன் தூய்மைமிக வாழ்ந்தநல்லோன்
வாழியநம் முருகேசம் பிள்ளை நாமம்
வாழ்வாங்கு வாழ்வதற்கு வழியைக்காட்டும். 2

நிந்தையற்றுத் தமிழ்ப்பண்பு நிறைந்தோன்என்ற
நினைவுகொளத் தக்கமுரு கேசம்பிள்ளை
தந்தையிவன் என்னோற்றான் தவங்களென்னத்
தக்கஒரு நன்மகனாய்த் தருக்கலாகும்
மைந்தன்கண பதிப்பிள்ளை மகிழ்ச்சிபொங்க
மகன்தந்தைக் காற்றும்ஒரு உதவிமானும்
இந்தமலர்ச் சூட்டுகின்ற இதனைவாழ்த்தி
இறைவனடி மனமார இறைஞ்சுகின்றோம். 3

# புது நெறித் தொண்டர்

தென்புலோலியூர்த் தமிழ்ப் புலவர் திரு. க. க. முருகேசபிள்ளையைப் பற்றி யாழ்ப்பாணத்து நண்பர் பலர் வாயிலாகக் கேட்டறிந்துள்ளேன். யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற தமிழ் விழாவிற்குப் போயிருந்தபோது அவரைக் கண்டு மகிழும் வாய்ப்புக் கிடைத்தது. அறிவின் பொலிவும் பண்புச் சிறப்பும் அவர்தம் முகத்தில் விளங்கின. அவர் தமிழ்மொழியிடத்தும் சைவநெறி யிடத்தும் கொண்டிருந்த பற்றுப் பெரிது. அமைதியாக, பழம்பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ்த் தொண்டு ஆற்றிய அவர், "ஈழமணி"யின் ஆசிரியராக விளங்கிப் புதுநெறியிலும் தொண்டு புரிந்துள்ளார்.

அவர்தம் அடிச்சுவட்டை ஒட்டி மக்களும் தமிழார்வம் உடையவராய் நன்னெறியில் நிற்பது மகிழுதற் குரியது. 'பயிற்சித் தமிழ்' ஆசிரியர் திரு. கணபதிப்பிள்ளையின் தமிழ்த் தொண்டு செம்மை சான்றதாகும்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

—டாக்டர், மு. வரதராசன்.
தமிழ்த்துறைத் தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

## தமிழாசிரியர்
## திரு. முருகேசபிள்ளை அவர்கள்

1925-ம் ஆண்டு ஒரு தினம் வண்ணார்பண்ணையில் உள்ள நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க பரீக்ஷைகள் நடைபெற்றன. அன்று அங்கே பலர் பல ஊர்களிலுமிருந்து பரீக்ஷை எடுக்கும்பொருட்டு வந்திருந்தார்கள். புலோலியிலிருந்தும் பலர் வந்திருந்தார்கள். புலோலியிலிருந்து வந்தவர்களுக்குள்ளே பரீக்ஷை யெடுப்பவர்கள் சிலர்; அவர்களை அழைத்துக்கொண்டு வந்தவர்கள் சிலராயும் இருக்கலாம். அவர்களுக்குள்ளே ஒருவர் சிவவேடப் பொலிவுடையராயும், மற்றவர்களாற் பெரிதும் மதிக்கப் படுபவராயும், எல்லாருடனுங் கலந்து நன்கு சம்பாஷிப்பவராயும் இருந்தார். அவருடன் பழகுவதற்கு நான் ஆசைப்பட்டேன். அது எளிதிற் கைகூடியது. அந்த ஒருவர் பழைய ஒரு உறவினர்போல என்னை அணைத்து அளவளாவி மகிழ்ந்தார். அவர்பால் எனக்கு ஒரு நேசம் என்னையறியாமலே உண்டானது. அவருடைய சைவப் பொலிவும், தமிழ் அறிவும் வசனிக்குந் திறமையும் என்னைப் பெரிதுங் கவர்ந்தன. சங்கத்துப் பரீக்ஷை மூன்று தினங்கள் அங்கே நடந்தன. அந்த மூன்று தினங்களிலும் அந்த ஒருவருடன் எனக்கு உண்டான பழக்கம் மூன்று வருடப் பழக்கம்போல வளர்ந்து முதிர்ந்தது.

> " புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும்"

என்ற திருக்குறள் இப்பொழுது ஞாபகத்துக்கு வருகின்றது. எனது உணர்ச்சியை அன்று பறிமுதல் செய்த அந்த ஒருவர் யார்? அவர் எங்கே?

அந்த ஒருவர், இன்று,

‘ நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத் திவ்வுலகு ’

என்ற திருக்குறளுக்கு இலக்கிய மாயினர் ; தமிழுக்கும் சைவத்துக்கும் இருப்பிடமான அவர், இன்று நம்மைப் பிரிந்து சென்றுவிட்டார். அந்தப் பெரியார்,

‘ உவப்புத்தலைக்கூடி
உள்ளம் ’

பிரிந்து விட்டார். அவரே தமிழ் ஆசிரியர் திரு முருகேசபிள்ளை அவர்கள்

அவர்களிடம் புராணங்கள் பயின்றவர்கள் எத்தனை பேர், இலக்கணங் கற்றவர்கள் எத்தனை பேர் ! சைவ சமயம் தெரிந்தவர்கள் எத்தனை பேர் ! அத்தனை பேருங் கதற ; அறிஞரான திரு முருகேசபிள்ளையவர்கள் இம் மண்ணுலகை அகன்று விட்டார்கள்.

சில வருஷங்களுக்கு முன் ஒருநாள் கீரைப்புலோலியில், முதலியார் திரு சுப்பிரமணியம் ஜே.பி. அவர்களின் வாசிகசாலையின் ‘ புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி ’ என்ற கந்த புராணச் செய்யுளைப் படித்து, நான் ஒரு பிரசங்கஞ் செய்தேன். அந்தச் சபையில், முக்கியஸ்தர்களின் வரிசையில், நமது தமிழாசிரியர் முருகேச பிள்ளையவர்கள் இருந்தார்கள். கந்த புராணத்தில் பல்லாயிரம் முறை பழகி, முழுகித்திளைத்த அவர்களைக் கண்டதும் நான் சற்றே கூசினேன். அவர்களோ, நான் சற்றுங் கூசாமல், தமது தலையை அசைத்து, மகிழ்ச்சி காட்டி ஊக்கம் அளித்தார்கள். அன்றிக் கூட்ட முடிவில் இனிய உரைகள் கூறி என்னை ஆசீர்வதித்துப் பழைய உறவைப் புதுக்கினர்கள்.

‘ பிரிந்தவர் கூடினுற்
பேசல் வேண்டுமோ ’

என்ற கம்பராமாயணம் அப்பொழுது நினைவுக்கு வந்தது.

சென்ற ஆண்டு ஒருநாள், வல்லிபுரக் கோயிலுக்குப் போகிற சாட்டில், புலோலியிலே மகாவிசேஷம் படைத்தவரும், பெரிய தார்க்கீகரும், பெரிய பெரிய வித்துவான்களுக்குப் பாடஞ் சொல்லி வைப்பவருமான ஒருவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால், அவர் வீட்டுக்குப் போனேன். அவரைக் கண்டேன். கண்டதும் கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானிகளின் கதை என் ஞாபகத்துக்கு வந்தது. அந்த அறிஞருடன் சம்பாஷிக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அந்தப் புத்தம் புதிய மனிதர் பெயர், திரு. கந்தமுருகேசன்.

திரு.கந்த முருகேசன் அவர்களைப்பற்றிப் பல வருடங்களுக்கு முன்னமேயே கேள்விப்பட்டிருந்தேன். அன்று நேரே கண்டேன். அவர்கள் திராவிட மகா பாஷிய கர்த்தராகிய சிவஞான சுவாமிகளைப் பாராட்டி, என் உள்ளத்தைக் குளிர் செய்தார்கள். அதன் பிறகு இரு படங்களைக் காட்டி என் கண்களையுங் குளிர் செய்தார்கள். இரு படங்களுந் தத்துவ ஞானிகளின் தாடி போன்ற தாடிகளையுடைய இரு பெரு அறிஞர்களின் படங்கள். அவற்றுள் ஒரு படம் திரு. கந்தமுருகேசன் அவர்களின் படம். மற்றப் படத்தைக் கந்தமுருகேசன் அவர்கள் மிக்க ஆராமையோடுஞ் சுட்டிக் காட்டி, இப்படம், நமது தமிழ் ஆசிரியர் திரு. முருகேசபிள்ளை அவர்களின் படம் என்றூர்கள். அப்படத்தைத் தரிசித்த போது 1925-ம் ஆண்டு ஒருதினம் நாவலர் சைவப் பிரகாச வித்தியா சாலையில் பலருக்கு நடுவே, சிவ வேடப் பொலிவில் ஆசிரியர் திரு முருகேசபிள்ளை

அவர்களைக் கண்ட நினைவு உதயஞ் செய்தது ; மகிழ்ச்சி ஊற்றெடுத்தது,

ஆனால் சில வாரங்களுக்கு முன்னே தினகரன் பத்திரிகையில், எந்தப் படம், பழைய உறவை ஞாபகப் படுத்திப் புதிய மகிழ்வை, ஊற்றெடுக்கச் செய்ததோ, அந்தப் படம்

"தமிழ் ஆசிரியர் முருகேச பிள்ளை அவர்களின் மறைவு" என்ற தலையங்கத்தில் வெளி வந்தது. அதனைக் காணவும் நேர்ந்தது.

"நெருநல் உளன் ஒருவன்" என்ற திருக்குறளின் கருத்துச் சிலையில் எழுத்தாய் எதிர் நின்றது ! ஆசிரியர் முருகேச பிள்ளை அவர்கள் வஞ்சகத்தை இன்ன நிறம் என்றும் அறியாத ஒரு புண்ணிய ஆத்மா. அவர்களின் ஆத்மா சாந்தி யெய்துவதாக.

—பண்டிதமணி, சி கணபதிப்பிள்ளை
திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலை

## உபாத்தியாயருக்குச் செய்யக்கூடிய கைம்மாறு

ஆங்கில மொழியை அரசியன் மொழியெனவும் அன்னம் தரு மொழியெனவும் அளவற்ற இன்பம் விளை விக்கும் செம் மொழியெனவும் உலகமாந்தர் யாவராலும் போற்றப்படும் மொழியெனவும் நினைந்து தம் தாய் மொழியாகிய தேன் மொழியை இகழ்ந்து உலகாயதம் தழுவிய நந்தமிழ் மக்கள் ஆங்கிலத்தை அல்லலுற்றுக் கற்ற காலம் இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியாகும். மேலும் தமிழ் மொழிக்கும் சைவசமயத்திற்கும் புத்துயிர் அளித்துத் தொண்டாற்றிய ஆறுமுக நாவலரை மறந் திருந்த காலம் இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதி என்பது மிகையாகாது. இத் தகைய நிலையில் அருந் தமிழ்த் தொண்டினைச் செய்தற்கெனப் புலோலியூரில் பிறந்தார் உபாத்தியாயர் முருகேசபிள்ளை அவர்கள். அவர் தம் இளமையில் தமிழ் மொழியை ஆவலோடு கற்றுவந் தனர். அக்காலத்தில் தமிழ் மொழியை வளர்த்தற்கெனப் புற்றளையில் சாரதாபீடவித்தியாசாலையை நிறுவியோருள் ஒருவராகத் திகழ்ந்தனர் உபாத்தியாயர் அவர்கள். அவர் அப் பாடசாலையில் ஆசிரியராக அமர்ந்து தொண்டாற்றி யிருந்தனர். பின்பு இளைப்பாறியிருந்த காலத்தில் வாத நோயால் பீடிக்கப்பட்டபோதிலும் தமிழ் மொழிக் கல்வி ஊட்டுவதற்குச் சிறிதும் ஆர்வம் குன்ருமல் தம் மாணவருக்கு இலக்கிய விலக்கணம், புராணம் என்பவற்றைக் கற்பித்து யாவராலும் போற்றப்பட்டிருந்தனர். உபாத்தியாயர் செய்த சேவையை உணர்ந்த புலோலியூர் மக்கள் அவருடைய அறுபதாம் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடித் தமிழ் மரபின்படி அவரைப் பொன்னுடை போர்த்து மகிழ்ந்தனர். இன்று தமிழுலகு அவரை இழந்து துன்புருநிற்கின்றது. இனி நம்

நாட்டு இளைஞர் உபாத்தியாயருடைய வாழ்க்கை நோக்கத்தை ஆராய்ந்தறிந்து தம் நாட்டைச் சீர்மையுறச் செய்தல் உபாத்தியாயருக்குச் செய்யக்கூடிய ஒரு கைம்மாருகும்.

—த. இராமநாத பிள்ளை
அதிபர், புலோலி இந்துக்கல்லூரி

## தமிழ்ப் பெரியார் க. க. முருகேசபிள்ளை அவர்கள் பிரிவைக் குறித்த கையறுநிலைப் பாக்கள்

(வ. மகாலிங்கம்)

சைவந் தழைக்கச் சலியா துழைத்துச் சயமடைந்த
தெய்வந் திருமலி நல்லூர் நயந்த திருமகனர்
ஐய னறுமுக நாவலன் போந்த வடிச்சுவட்டிற்
றுய்ய வொளிப்பிழம் பாய்முரு கேசன் றுலங்கினனே.

பூவுக் கணிமணி வாசகத் தேனும் புனிதமுறு
நாவுக் கரயன் நயந்த பதிகமென் நன்னிதியுந்
தாவில் சிவமதஞ் சாற்றுபு ராணத் தருமநெறி
யாவு மறிமுரு கேசனைப் போலினி யாருளரே.

முத்தமிழின் வளமெங்கும் முரசி யம்பி
முன்னணியில் தமிழ்காக்க முயலு செம்மல்
உத்தமனுந் தமிழ்ப்பரிதி யுலக மேத்து
முயரறிவுப் பாசறையா முயர்வு தாழ்வில்

இத்தரையின் சமதர்ம ஞானி யெந்தன்
இனியதமிழ்க் கந்தமுரு கேச னார்க்குப்
புத்தமுதாந் தமிழூட்டிப் போந்த வோசன்
பூதலத்து முருகேசன் நாமம் வாழி.

## சாந்த குண ஏந்தல்

"தமிழன் என்றொரு இனமுண்டு. தனியே அதற்கொரு குணமுண்டு" என்பதற்கு, தமிழ்ப் புலவரும் ஆசிரியருமாகிய தென்புலோலியூர் க. க. முருகேச பிள்ளை அவர்களின் வாழ்க்கையே சான்று பகரும்.

தமிழ் இலக்கிய விலக்கணப் பெருங்கடலில் மூழ்கித் திளைத்த இப் பெரியார், தமக்கென வியைந்த, தன்னேரிலாத ஓர் தனி வழியை மேற்கொண்டு இலக்கியத்தோடு நன்று பழகி, தாமின்புறுவ துலகின்புறக் கண்டு, கலை பலவுங் காமுறக் கற்று, யாம் பெற்ற வின்பம் பெறுக வ்வையகம் எனவுணர்ந்து, பற்பல பண்டித மாணவர்க்கு ஊர் நடுவே பழுத்த பயன் மரம் போன்று, இலக்கியக் கலையாம் இன்ன முதூட்டி, செயற் கருஞ் செயல்கள் வியத்தக வீட்டி, யாவரும் உவப்பத் தலைகூடி உள்ளப் பிரியு மியல்பினராய், சாந்த குண ஏந்தலாய், சிக்கன வாழ்வினராய், புலமிக்கவரைப் புலமை தெரியும் புலமிக்கவராய், மாமகளையும் நாமகளையும் மருவி வாழ்பவராய், பெறுமவற்றில் யாமறிவதில்லை யான அறிவந்த மக்கட் பேறுடையராய், கற்ற கல்விக் கேற்பக் குற்றமின்றி கற்றபடி வாழ்பவராய், ஊருக்கு உத்தமராய், இன்பத்தையும் துன்பத்தையும் ஏற்றுக்கொள்ளா ஞானியாய், புதினத்தாள் மூலம் புத்தியைப் புகட்டியவராய், செஞ்சாலியென்னும் சிறந்த பிரசங்க மழை அஞ்சாது பெய்யு மருமுகிலாய், தமிழன் பண்பாட்டிற்கும் கலாச்சாரத்திற்கும் கருவூலமாய், ஞாலம் போற்றுஞ் சீலராய் வாழ்ந்தாரென்பது மிகையாகாது.

மேலே நாம் கூறிய அத்தனைக்கும் நிலைக்களனாய் அமைந்த புலவராசான், தன் பிற்கால வாழ்வில் தமிழ்

வளர்ச்சியின் பொருட்டு ஆக்கவேலைகள் பலவும் ஊக்க மாய்ச் செய்ய உத்தேசித்திருந்தும், ஏற்பட்ட வோர் ரோகத்தின் அரசாட்சி ஆக்கிரமிப்பால் அடக்கி யொடுக் கப்பட்டு இவ் வுலக வாழ்வை நீத்து, மண்ணவர் வருந்த, விண்ணவர்க்கு விருந்தானமை, அவரது அரிய பத்தினி யார்க்கும் அறிவந்த மகார்க்கும், சுற்றமித்திரர்க்கும், விசேடமாய்த் தமிழுலகிற்கும் ஆற்ருெணுத் துயரை விளைப்பதாயிற்று. கால நியதிக்குட்பட்ட சீவர்களைக் காலங் கடந்து நடாத்தும் இறையாகிய சிவபெருமான் திரு. க. க. முருகேசபிள்ளை ஆசான் அவர்களின் ஆன்மா சாந்தியடையும் பொருட்டும், அன்னுரைப் பிரிந்து துயருறும் சுற்றமித்திரர்களுக்கு ஆறுதல் பாலிக்கும் பொருட்டும் திருவருள் புரியுமாறும் மனமார வழுத்து கின்ருேம்.

—பண்டிதர், சி. கந்தையா

வடகோவை

## இளைய மகன் மு. திருநாவுக்கரசு பாடியவை

### வெண்பா

1. மன்மத வாண்டுற்ற மார்கழியீர் பன்னிரண்டு
மன்னு விசாகமே காதசி—பொன்கதிர்நாள்
எந்தை முருகேசன் என்னைப் பிரிந்தோடிக்
கந்த னடிசேர்ந்தான் காண்.

2. கந்தனரு ளாலிந்தக் காசினியி லோர்குருவாய்
வந்த வருளுருவாய் மன்னெந்தாய்—பந்தவினைப்
பூதவுடம் போடு புகழுடம்பு மிங்கிருப்பச்
சோதியுடம் பேனெடுத்தாய் சொல்.

3. உத்தமா சிரியனாய் உவந்துநன்
மாணவரை உய்ய வைத்தாய்
பத்திரா சிரியனாய்ப் பல்லோர்க்கும்
பேரறிவு பரப்பி வைத்தாய்
புத்தியா யுலகமதில் புராணவுரை
எல்லோர்க்கும் புகட்டி வைத்தாய்
பத்தியாய் முத்திதரும் முருகபதம்
தேடிநீ பரந்திட் டாயே.

4. உலகமெலா மிந்துமத வுண்மைதெரிந்
துயர்நெறியி னொழுகி யுய்யப்
பலவரிய பிரசங்க மொழிந்தவுனர்
பதச்சுவட்டேய் கற்போர் பல்லோர்
பலகலைகள் என்றனுக்கும் பயிற்றுவித்து
பவநெறியில் செல்லா வண்ணம்
நிலவிடவைத் தெந்தாய்நான் கலக்கமுற
நிகழ்த்திடவிண் ணோர்க்குற் றாயே.

# தமிழன்னை பொலிவிழந்த நாள்

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலை பத்து மணி யிருக்கும். விடுதலைக் காலத்தைக் கழித்துக்கொண் டிருந்த ஆசிரியர்கள் அனைவரும், அடுத்தாண்டு வேலைத் திட்டத்தைத் தயாரிப்பதற்காகப் பாடசாலை மண்டபத்திற் குழுமி யிருந்தனர். அடுத்த நிமிஷத்தில் நடப்பதை யார் அறிவார். அவர்கள் எதிர்பார்த்திராத சம்பவ மொன்று அவர்களை எதிர்நோக்கி வந்தது. பல்லாண்டு எங்களோடு பழகிய பேராசிரியர் திருவாளர் கார்த்திகேச பிள்ளை உபாத்தியாயர் என வழங்கும் முருகேசபிள்ளை ஆசிரியர் சிவபதமடைந்த செய்தி காற்றினிலே பறந்து வந்தது. கேட்டதும் ஆசிரியர் உடல் பதறினர். உளம் நைந்தனர். துக்கமேலீட்டாற் புத்தி தடுமாறினர். செய்வதி யாதென் றறியாது திகைத்து நின்றனர். பின்னர் ஒருவாறு தெளிந்து ஆசிரியரின் பூதவுடலையாவது பார்த்து ஆறுதல் அடைவோமென்று அன்னாரின் இல்லம் நோக்கி விரைந்தனர். மன்மத ஆண்டு மார்கழித் திங்கள் 24-ம் நாள் (8-1-56) ஆகிய அன்றே தமிழன்னை பொலிவிழந்த நாள். தமிழ் மக்கள் துக்க சாகரத்தில் அமிழ்ந்திய நாள். ஆசிரியரின் மாணவர்கள், மாணவரின் மாணவர்கள், உளம் நைந்து உடல் உருகிப் பதை பதைத்த துன்ப நாள்.

எங்கள் ஆசிரியர், புற்றளைப் பாடசாலை என்று செனித்ததோ அன்றே மாணவர்க்கு அறிவு புகட்டும் தலையாய ஆசிரியராகக் கடமை யேற்றார். எங்கள் மாணவரில் சைவ மணங் கமழப் பெரிதும் உழைத்தார். பாடசாலையின் வளர்ச்சியே அவர் வாழ்க்கையின் குறிக்கோளாகத் திகழ்ந்தது. அவரின் விடா முயற்சியால்

பாடசாலை மிகவும் உன்னத நிலையடைந்து அநேக நன் மாணுக்கரைத் தமிழுலகுக்குத் தந்தது.

அப் பெரியாரோடு உடனிருந்து வாழவும், கூடியிருந்து மாணவர்க்குக் கல்வி பயிற்றவும் எங்கட்கு வசதி கிடைத்தது நாங்கள் செய்த பெரும் பாக்கியமாகும். அவரிடத்தில் எத்தனையோ சிறப்பியல்புகள் சிறந்து விளங்கின. அவற்றுட் சிலவற்றை மாத்திரம் இங்குக் கூற விரும்புகிறோம். கல்வி பயிற்றலில் ஆசிரியர்க்கு விசேஷ அறிவும் விசேட சித்தியுமுண்டு. அவர் கற்பிக்கும் மாணவர் எப்பொழுதும் விசேட அறிவாற்றல் உள்ளவர்களாய் விளங்கினர். மிகவும் குறைந்த நிலையிலுள்ள மாணவர்களையும் மிகத் திறமையானவர்களாக்கும் பேராற்றல் ஆசிரியரிடத்தில் அதிகமாகக் காணப்பட்டது. அவருடைய வகுப்பு மாணவர் எப்பொழும் சைவ சமயாச்சார முறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதை நாம் காணக்கூடியதாயிருந்தது. சுருக்கமாகக் கூறின் ஆசிரியர் அவர்கள் ஆசிரிய இலக்கணங்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினர்.

"நாவலர்" என்ற பதம் ஆறுமுக நாவலரை அடைந்து எவ்வளவு பெருமையடைந்ததோ அதேபோல "ஆசிரியர்" என்ற பதமும் எங்கள் ஆசிரியரை யடைந்தது; விசேடம் பெற்றது. சைவம் குன்றிக் கிறிஸ்தவ மதம் தலை தூக்கிய அந்தக்காலத்தில்யாழ்ப்பாணத்தில் நாவலர் பெருமான் தோன்றி, அந்நிய சமயத்தோரை வென்று சைவத்தை வளர்த்தனர். அதேபோன்று நிரீச்சுர வாதம் என்ற பசாசு மக்களை ஏமாற்றிவரும் இந்தக் காலத்தில் புலோலியில் இப்பெரியார் அவதாரஞ் செய்தார். இளஞ்சிறுர் மனதில் கடவுட் பக்தியை யுண்டாக்கினுர். நல்ல சைவப் பிரசைகளை உருவாக்கினுர். உலோகாயதம்

முதலிய மதங்களை முறியடித்துத் தமது பிறவியின் நோக்கத்தை நிறைவேற்றினர். எங்கு புராணப் படனம் நடைபெறுகிறதோ, எங்கு சைவப் பிரசங்கங்கள் நடைபெறுகிறதோ, எங்கு சைவாசாரியார், சமயாசாரியார் குருபூசை நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் எங்கள் ஆசிரியரைக் காணலாம். "குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும் பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்" பொருந்தப்பெற்ற எங்கள் ஆசிரியரைக் காணுத பிரசங்க மேடைகள், புராணப் படனம் செய்யும் கோவிற் சந்நிதானங்கள் எங்கள் நாட்டிலில்லை என்றே கூறலாம்.

சிவஞான சித்தியார் முதலிய சைவ சித்தாந்த சமுத்திரத்தைக் கரை கண்டது மல்லாமல் பரந்த தமிழ் இலக்கிய ஆழியிற் திளைத்து விளையாடினுர்கள். கந்த புராணத்துக்குப் பயன் சொல்லுங் காலையில் அதைக் கேட்போர் மனதில் அந்தக் கச்சியப்பரே இவரிடம் பிச்சை கேட்க வேண்டுமென்று தோன்றும்.

இராமயணச் செய்யுள்கட்குக் கவிநயங் கூறுங் காலத்தில் அந்தக் கம்பனே இவ்வுரு வெடுத்தானெனத் தோன்றும். இப்படியாகத் தமிழ் இலக்கியத்தில் ஒரு பெரும் மேதையாக விள்ங்கினுர்கள்.

இலக்கியம்போன்று பஞ்ச லக்கணத்திலும் ஒரு பெரும் வித்தகராக விளங்கினர். ஆசிரியர்களாகிய எங்கட்கு ஏதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால் அதை மிகத் தெள்ளத் தெளிந்த தமிழிற் தகுந்த உதாரணங்களுடன் விளக்கிச் சந்தேகத்தை நீக்குவார்கள். அவர் செதுக்கி உருவாக்கிய தமிழ்ப் பண்டிதர்கள் பலர்; அவர்களுட் தலையாயவர் தமிழகத்தைச் சேர்ந்த வித்தகன் கந்த முருகேசன் என்பார் ஆவர். எங்கள் ஆசிரியர்

எவ்வளவு பரந்த அறிவுடையர் என்பதற்கு அவர் ஆக்கித்தந்த-தமிழுலகு நன்கறிந்த - கந்த முருகேசனே சாலுங் கரியாவர்.

"மனைவியொடு மக்களும் நிரம்பினர்" என்ற பிசிராந்தையார் வாக்குக்கும், "தக்கார் தகவிலரென்பது அவரவர் தம், எச்சத்தாற் காணப்படும்" என்ற வள்ளுவன் வாக்குக்கும் ஏற்ப, அவருக்குகந்த அம்மையாரும் அவர் கண்ணனைய இருபெரும் மக்களும் வந்து வாய்த்தனர். ஆசிரியரவர்கள் தமிழ்த் தொண்டு சைவத் தொண்டு ஆதியன புரிவதற்குப் பெரிதும் உதவியா யிருந்தவர் அம்மையாரவர்களேயாகும். "தந்தை எப்படி, தனயரும் அப்படி" என்ற பெரியார் வாக்குக்கிணங்க இரு பெரும் மக்களைத் தமிழுலகுக்குத் தந்துதவி யுள்ளார்கள்.

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்ற தேவர் வாக்கைத் தந்தை கடைப்பிடிக்க, "மகன் தந்தைக் காற்றுமுதவி இவன் தந்தை எந்நோற்றான் கொல் என்னுஞ் சொல்" என்ற பொய்யா மொழியை அவர்தம் மக்களிருவரும், கடைப்பிடித்தொழுகுகின்றனர். அவரின் சிரேஷ்ட புத்திரன் உயர்திரு கணபதிப்பிள்ளை அவர்கள் மொழி அலுவலகத்தில் ஒரு பிரதான அங்கத் தவராயிருந்து எமது தமிழன்னைக்கு அளப்பரும் சேவை செய்து வருவதை நாமனைவரும் நன்கு அறிவோம். அவரது இரண்டாவது புத்திரன் திருநாவுக்கரசு என்பவர் பள்ளி மாணவனுயிருக்கும்போதே பல நூல் களின் பதிப்பாசிரியராயும் தொகுப்பாசிரியராயும் விளங்கிய தமிழுலகு நன்கறியும்.

ஆசிரியரவர்கள், ஆண்டிலும் அறிவிலும் நிரம்பிய முதியோனுயினும் மன எழுச்சியிலும் உள உணர்ச்சி

யிலும் என்றும் இளைஞனாக, தமிழ் தந்த முருகனாக விளங்கினார். அவர் மேடைகளிற் செய்த பிரசங்க மாரிகளும் கந்த புராண விருத்தி யுரைகளும் கம்பன் கவிநயங்களும் இன்றும் என்றும் எங்கள் காதில் ஒலித்துக்கொண் டிருக்கின்றன. "திருவாசக மிங் கொருகால் ஓதில் கருங்கல் மனமும் கரைந்துருகக் கண் கள் சுரந்து நீர்பாய" என்ற மணிவாசகத்துக் கொப்ப, ஆசிரியரவர்கள் தேவார திருவாசகங்களை ஓத, கேட்டு நிற்கும் பக்த கோடிகள் தம் நிலை மறந்து, உளம் நெகிழ்ந்து பக்தி பரவசப்பட்டு ரோமம் சிலிர்ப்பக் கண்ணீருகுத்துக் கூப்பிய கரத்துடன் நிற்பதை என்றும் நலம் காணக் கூடியதாயிருந்தது.

எங்கள் குருநாதன் எங்கள் மத்தியில் இன்னும் பலகால மிருந்து எங்களுக்கு நல்வழி காட்டியும் தமது பரந்த அறிவாகிய அமிர்தத்தை எங்கட்கு அள்ளியள்ளித் தந்தும் சைவத் தொண்டு தமிழ்த் தொண்டு செய்வார் களென நம்பியிருந்தோம். ஆனால் விதி சதி செய்து விட்டது. தமிழ் மக்கள் செய்த தவக்குறைவின் விளைவாக, ஏற்கனவே தமது அருமருந்தன்ன தவப் புதல்வர்களாகிய ஆசிரியர் கல்கி, ஆசிரியர் டி. கே. சி. நவாலி சோமசுந்தரப் புலவர், கண்ணபுரத்து வெண் ணெய்க் கண்ணன்போன்ற தமிழ்ப் புலவர்களை இழந்து துடிக்கும் தமிழன்னை உளம்நோவ மாணவர்கள், மாணவ ரின் மாணவர்கள், மற்றுந் தமிழ் மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்ப, அம்மையார், மக்கள், உற்றார் கதறியழ எங்கள் பெரியார் இம் மன்மத ஆண்டு மார்கழித் திங்கள் 24-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 - மணியளவில் தமது பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பெய்திவிட்டனர். பூதவுடம்பு அழிந்த தெனினும் அவரின் புகழுடம்பு என்றும் சோதியாகத் தமிழ் வானில் விளங்கும்.

அவர் தமிழுக்கு—சைவப்பெரு மக்களுக்கு—ஆக்கித்தந்த புகழ் பெருமை ஆதியன என்று மழியாது. சைவர்கள் அந்நன்மைகளே மறக்கவும் முடியாது.

புலோலி அறிவாதித் தோதய சங்கம் புற்றளேச் சைவப் பாடசாலே மற்றும் அவர் செதுக்கித் தமிழுலகுக் குதவிய ஆசிரியர் குழாம் என்பன அன்னாரின் தன்னல மற்ற தமிழ்த் தொண்டு சைவத் தொண்டுக்கு உலகுள்ளளவும் சான்று பகரும் ஞாபகச் சின்னங்களாகும். எங்கள் பெரியாரை இழந்து மனந்துடித்து நிற்கின்ருேமெனினும் அவர் எங்கட்குக் காட்டிய நல்வழிகள் தாம் வாழ்ந்து காட்டிய முறைகள் எங்களே வழி நடத்துமென நம்பி நாம் ஆறுதலடைகிருேம்.

குருநாத,

“ தனக்கென வாழாத பிறர்க்குரியாள ! தங்கள் சஷ்டியப்த பூர்த்தி விழாவிற் தங்களுக்கு அன்பாகப் பொன்னுடை போர்த்தி மகிழ்ந்தோமே! அன்று நாம் கண்ட ஆனந்தக் காட்சி இன்றும் எம்மனக் கண்முன் காட்சி தருகின்றதே! என் செய்வோம்!நாங்கள் அன்புடன் தங்கள் திருவடிக்குச் சாத்தும் இவ்வன்பு மாலேயைச் சூக்ம ரூபத்திலுள்ள நீங்கள் அன்புடன் ஏற்று எங்களே ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிருேம்.

இங்ஙனம்,

தங்கள் பிரிவாற்ருது புலம்பும்,

18—1—’56. புற்றளேப்பாடசாலே ஆசிரியர்கள்.

## அரும் பெரியையா !

தோற்ருேமே சொல்லரிய சோதியினை இவ்வுலகில்
மாற்ருேமே துக்கம் மனமெரியச்—சாற்றரிய
எம்மரபை யேவிளக்கு மின்தமிழ் நல்விளக்கே
உம்வரவைக் காணுவமோ வோது.

இவ்வூ ரெங்கணும் பொலிவுறு நாமம்
யாவரும் வியப்புறும் இன்தமிழ் ஊராம்
தமிழர்தம் நாட்டில் தழைத்தநற் செல்வம்
அமிழ்தெனக் கலையைக் கற்றநல் அன்பன்

அன்பு தழைத்தொளிர் தண்தமிழ் ஊரில்
பயிற்றினை பலரைப் பண்பொடு நோக்கி
நோக்கிய அன்புதான் அறிவென மாணவர்
பயின்றனர் புராணம் இன்னும் பற்பல

கலைகளை ஓதினை என்றுநான் மகிழ
பிரிந்தனை என்னை துயருள் ஆழ்த்தி
சொன்ன சொல்யாவும் தேவ சொல்லென்று
நடந்தேன் அதன்படி நடந்த என்னை

பணித்தாய் உன்மா ணவனுங் கந்த
முருகே சனிடம் முன்னிடு கலைபல
கற்கெனக் கற்றேன் மற்றியான் தேறி
மகிழ்நிலை காணுமுன் மறைந்தனை மறைந்தனை

அகமிக வாடுவன் அரும்பெரி யையா
தகவோ நினக்கிது சொல்லாய்
அகநோய் நீங்கிடும் அமயம் வருமோ !

—பெருமகன், த. பாலகணேசன்

## குணக்குன்று

1. அன்பாளர் அறவாளர் ஆண்மையாளர்
அருங்கலைகளொருங் குணர்ந்த பெருமையாளர்
தன்மானமிழவாத தமிழினத்தின்
பண்பாளர் பகைமையிலாச் சீர்மையாளர்
குன்ருத புகழுடைய குலத்தின் செம்மல்
குணக்குன்ரு மாசிரியர் கார்த்திகேசு
பொன்றினுரென்றது புலோலி தெற்கின்
பொன்விளக் கொன்றவிந்து போனவாறே.

2. அச்சமில்லா நெஞ்சுரனு மழகுங் கண்டோம்
அருங்கலைகளூட்டலிலோரருமை கண்டோம்
கச்சியப்பன்வாய் மொழியைக் கருத்திற்கண்டோம்
காணு சிவ சின்னங்கள் கலந்து கண்டோம்
நிச்சயமாய் சிவமதமே நேரிதென்ற
நெடுநாளினுண்மைதனை நேரிற் கண்டோம்
இச்சகம்பேசா வின்சொல் லினிமை கண்டோம்
இறைபதஞ் சேராசிரிய ரிவறன் மாட்டே.

3. கடல்வண்ணன் காப்பண்டினேரில் தோன்றும்
கலைமகளின் கருணையுரு நாவில் தோன்றும்
மடவரலையிடமுள்ளான் பாசமெல்லாம்
மனைமக்களுருவினிலே மலிந்து தோன்றும்
படவரவுதாங்கு நில வுலகம் போற்றும்
புகழாகி யோருருவம் பொலிந்து தோன்றும்
அடலண்ணல் ஆசிரியர் காத்திகேசு
ஆனமுருகேசபிள்ளை இவறன்மாட்டே

—க. அருளானந்தம்

# ஸ்ரீ முருகேச பிள்ளை ஆசிரியர்

**எ**ன்னுடைய ஆசிரியத் தொழிலிலே, முதல் ஐந்து வருஷங்களும் பொன்னான காலம். அந்தக் காலத்திலே தான், திரு. முருகேச பிள்ளை ஆசிரியர் அவர்களுடன் கலந்து பழகும் பாக்கியம் பெற்றேன்.

நெருங்கிப் பழக நேர்ந்ததால், அவரின் அருங் குணங்களையும், ஒழுக்க மேன்மையையும், பரந்த உளப் பண்பையும், புராண அறிவின் உயர்வையும் அறிந்து உணர்ந்து அநுபவிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

ஸ்ரீ முருகேசபிள்ளை ஆசிரியர் அவர்கள், பணிபுரிந்த காலத்திலேதான், சாரதா பீட வித்தியாசாலை, கலையின் பிறப்பிடமாகவும், சமய வாழ்வின் உறைவிடமாகவும் விளங்கியது!

பாடசாலையிலே நடைபெறும் எல்லாக் கூட்டங்க ளிலும், குருபூசைகளிலும், கொண்டாட்டங்களிலும் ஆசிரியர் அவர்களே பிரதான புருஷராய் விளங்குவார். தாமே முன்னின்று, உழைத்து, எல்லாஞ் செய்து இனிது நிறைவேற்றி முடிப்பார்! அவர்களில்லாத கூட்டம் வெறிச்சென்று சூனியமாகத் தோன்றும்!

பள்ளிப் பிள்ளைகளுக்குப் புராணங்களின் உட்கருத் துக்களை, உண்மைகளை, உயர்வுகளை, கதை கதையாக இனிக்க இனிக்கச் சொல்லுவார்; சிரித்து மகிழும்படி சொல்லுவார்; உள்ளத்திலே உறைக்கும்படி சொல்லு வார்.

கந்த புராணத்துக்கு, ஆசிரியரவர்கள் பயன் சொல்லத் தொடங்கினால், தன்னை மறந்து அதனுடன் ஒன்றிவிடுவார். எல்லாரும், வாய் பிளந்து, கேட்டு உணர்ந்து பயன் பெறுவர். ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய

ரையே காண்பர். எங்கள் வட்டாரத்திலே, அவர்கள் போல், கந்த புராணப் பயன் சொன்னவரை நான் கண்டதில்லை.

ஆசிரியர் அவர்களின் நூற்றுக்கணக்கான பிரசங்கங்களைக் கேட்டுப் பயன் பெற்றேன்; ஆனந்தம் பெற்றேன். சாந்தி பெற்றேன்! அவர்களின் ஒவ்வொரு பேச்சிலும் ஆழ்ந்த சமய உண்மைகள் வெளிப்படும்; அறிவுக்கு விருந்தாகும். கேட்ட நேரம், பயன்படும்!

எங்கள் தும்பளைச் சிவப்பிரகாச வித்தியாசாலையிலே, என்னுடைய வேண்டுகோளுக் கிசைந்து, பல பிரசங்கம் புரிந்து, எங்கள் ஊரை உயரவைத்த அவர்களின் அருந் தொண்டை, நான் என்றும் மறவேன்!

அவர் முதிர்ந்த சைவப் பழம். அவர்களைக் கண்டாலே, சைவமும், சிவனும், சிவனடியாருந்தான் நினைவில் எழும்.

அந்த மகானை இழந்தோம். சைவத்தை, புராணத்தை இழந்தோம். அவர்கள் ஆன்மா சாந்தியடைக!

—வே. சிதம்பரப்பிள்ளை
ஆசிரியர்

## பல்கலைக் குரிசில்

### எழுசீர் விருத்தம்



1. எங்குள வளனுந் தங்கியே மாறு
 தேற்றமுந் தோற்றமும் வாய்ந்து
மங்குரேய் மலையும் மாநதி வளனும்
 மாபலா தெங்குதேன் கதலி
சங்கையின் றேங்கித் தராதலம் புகழுந்
 தன்னிக ரென்பதே யில்லாப்
பொங்கிய வளமா ரீழமா தீவிற்
 போற்றுமூர் புலோலிமூ தூரே.

2. இந்தமா மூதூர் தன்னிலே மேலாய்
 இலங்கிடு குடிபல வதனுள்
உன்னருங் கல்வி யுயர்தவ மொழுக்க
 முச்சமாய்த் தாங்கிய புலவர்
சென்னியிற் சூடி யேத்தியே புகழுஞ்
 சிறப்புறுந் துங்கமா மணியாய்
பன்னரும் முருகே சாம்பெயர் தாங்கிப்
 பண்டித ரவதரித் தனரே.

3 வளர்ந்திடு மதியின் விளங்குமின் முகமும்
 வான்றரு வொத்தநற் கரமும்
அளவிலா வறிவும் பாத்துணு நெறியு
 மற்றவர்க் கிரங்கிடு குணமும்
வளம்பெறு நெஞ்சும் வாய்மைசேர் மனமும்
 வசந்தனும் நாணுறு முருவும்
உளமகிழ் வேதா வேகமா யிவற்கென்
 றுலகதிற் படைத்தன னன்றே.

4. கற்பதிற் றனியே நின்றிடா தேத்திக்
கற்றதை மாணவ ருணரப்
பற்றுளங் கொண்டு கற்பிக்க வாவி
பாரினிற் புற்றளை யென்னும்
நற்பெரும் பதியிற் சாரதா பீட
நற்கலா சாலையொன் ருக்கிச்
சொற்பொழி வாற்றுந் தொண்டினில் முனைந்து
சொல்கலா விநோதனு மானேன்.

5. செந்தமிழ்க் கனியாய்த் திகழ்ந்திடு கந்த
புராணமாந் திவ்விய நூலைப்
புந்தியி லேற்றுப் பொருள்விரித் தாய்ந்து
போற்றுதல் செய்துமுன் னின்றேன்
இந்தமா நிலத்தி லெவர்களு மறியா
இலக்கண விலக்கிய மாய்ந்த
சுந்தரக் குரிசி லென்றுல கேத்தச்
சொல்லரும் புலமையிற் றிளைத்தே.

6. வேம்பெனப் பள்ளி மாணவர் நாடார்
வெறுத்திடு மிலக்கண நூலை
தேம்பிழி யுற்ற தீங்கனி யாக்கிச்
சிலையெழுத் தென்னமா ணவர்கள்
சோம்பலே யில்லா வூக்கமா ருளத்தான்
தோய்ந்திட முனைந்துகற் பித்தோன்
வாம்பிணி முகத்தி லேறுவே ணூற்கு
வளம்பெற வுரையதை வகுத்தே.

7. கற்றவர் போற்றிச் சிரத்தினி லிருத்திக்
   கைதொழு தேத்துநல் லாசான்
பற்றுட னேத்தி மாணவர் போற்றும்
   பல்கலைக் குரிசிலு மானேன்
செற்றமே கடிந்து சிவனடி யாரைச்
   சிவமெனப் போற்றுதல் செய்து
அற்புத மார்ந்த முத்திறப் பொருணூல்
   ஆய்வழி நின்றுமே கற்றேன்.

8. பண்டிதர்க் குரிய பல்கலை யறிவும்
   பற்றுடன் மந்திர நினைவுங்
கண்டிபூண் கழுத்து காயமேல் நீறுங்
   கந்தவேள் புராணமாம் நூலிற்
கொண்டுள பற்றுங் குறைவிலா நிறைவுங்
   கோதறு செல்வமாய்க் கொண்ட
புண்டரம் பொலிந்த முண்டக முகமும்
   பூதலம் போற்றிடக் கண்டோம்.

9. அலைகட லதனை யாடையா யுடுத்த
   அவனியில் வாழ்ந்திடு மாந்தர்
தலையெனக் கண்ட பல்வகை மதத்திற்
   சைவமே சிறந்ததென் றுள்ளி
கலையெலா முணர்ந்து புலாலுண வொழித்து
   கற்றவர் விழுங்குநற் கனியாய்
மலையில்வாழ் சிவனை மதிப்பரு முளத்தால்
   மறந்திடா தேத்துநல் லறிஞன்.

10. பூமியிற் றலங்கள் பலபல பணிந்த
புண்ணிய வசத்தின ணுகி
காமிகம் முதலா மாகமந் தோய்ந்து
கலையது போதித்த குருவை
தோமிலா தேத்திப் பாசமே கடிந்து
சொல்லரும் பரம்பொரு ளான
நேமியோன் காணு நிமலனுர்.பாதந்
நேர்ந்தின்ப முற்றனன் மன்னே.

## கல்விக் களஞ்சியமே !

இறக்கும்போ துன்முகத்தில் விழித்தே னல்லேன்
இனியவாய் மொழியொன்றுங் கேட்டே னல்லேன்
சிறக்கு முபசாரங்கள் செய்தே னல்லேன்
சிந்தைநிலை யேதென்று தெரிந்தே னல்லேன்
உறக்கமுணை யிழந்ததற் பின்னுற்றே னல்லேன்
ஒகொடியே னென்செய்வேன் உயிர்போல் நண்பா.
மறக்க மனம் வருமோ இவ் வைய மீதில்
வந்தொருகால் என் துயரமாற்று வாயே

காருண்ய சிங்கன் கலைராச சிங்கனிக் காசினியில்
சீரின்ன செல்வச் சிறப்பினன் சற்குணம் தேங்கு
[முள்ளோன்
தேரும் பிரசங்க சிங்க மெய்ஞ்ஞானம் சிறந்துடையோன்
ஆரும்புகழ் முருகேசனும் பெயரன் பினனே.

கல்விக் களஞ்சியமே கற்பகம் நேர்கொடைவள்ளல்
செல்வப் பெருக்கோடு தினமும் எம்முன் னுற்றனையே
மெல்ல எமை நீங்கி மேலாங் கதியடைந்தே
எல்லாரும் வருந்தவிட்டுக் கயிலை ஏகினையே.

—ச. மு. இராமஸ்வாமி.

# தென்புலோலியூர்
# க. க. முருகேச பிள்ளை ஆசிரியர்

புலவர் ஒலிமிக்க ஊரே புலோலி ஊரென்று வழங்குவது வெறும் உயர்வு நவிற்சியன்று. உயர்வு நவிற்சியென்று சந்தேகப்படுவோர் அது க. க. முருகேச பிள்ளை ஆசிரியர் (என்னும் கார்த்திகேசு உபாத்தியாயர்) பிறந்த ஊரென்பதனை நினைவு கூர்ந்தால் அவர் சந்தேகம் சூரியன் முன் பனித்திவலை போலகலும். புலோலி ஊரில் புலவர்கள் மாத்திரமன்றி புலவர்தம் பாடல்களின் நயத்தையும் நன்கு சுவைத்துச் சுவைத்து இன்புறுவோரும் உளர் என்பதற்கு முருகேச பிள்ளை ஆசிரியர் எடுத்துக்காட்டாக இருந்து தமிழன்பர் இதயந் திடுக்கிட மறைந்தார். அன்பர் இதயந் திடுக்கிட்டதோடமையாது புலமைமிக்க உள்ளங்களை நனி கலக்கியும் விட்டது இப்பெரியார் மறைவு. புலோலி சிறந்த சைவ தமிழ் வளமோங்கும் பூமி. அது தென்பூமி. தமிழும் தென் (=அழகு) தமிழ்தானே. ஆகவே தமிழ் வளங்கனியும் புலோலியும் தென் (=அழகு) புவிதானே. இத்தகைய தென்புலோலியின் தென்பாகம் முருகேச பிள்ளை ஆசிரியர் பிறப்பால் தென்புலோலியாகியே விட்டது. சைவ இலக்கியங்களைக் கண்ணெனக் கொண்டாடிய முருகேசபிள்ளை கந்த புராணத்தைக் கண்மணியெனக் கொண்டார். கண்மணியிழந்தும் கந்த புராண மணிக்கு மணி மணியாக உரை கண்ட மேலைப் புலோலி சிதம்பரப் பிள்ளை ஆசிரியர்*கார்த்திகை மாதம் நம்மை விட்டுப் பிரிய (இக் கார்த்திகேய) முருகேச

---

*ஊனக் கண்ணிழந்தும் உளக் கண்ணிழக்கா இவ்வாசிரியப் பெருந்தகை சூரபன்மன் வதைப் படலத்துக்கு விரிவுரையும் தெய்வயானை அம்மை திருமணப் படலத்துக்குக் குறிப்புரையும் தந்துள்ளார்.

மணியும் தம் கண்மணியையிழந்த (இரு கண் பார்வையு மற்ற) சிதம்பர மணியைக் கண்டு அளவளாவி கந்த புராணத்தைரசிக்க அடுத்தமாதமே அவரைப் பின்தொடர்ந்து விட்டார். உண்மை உளங்கள் பிரிவினைத் தாங்க மாட்டா என்பதற்கு இவர்கள்தம் பிரிவு சாட்சி கூறும். தென்புலோலியூர் முருகேச பிள்ளை "இந்தத் தமிழ் தானென்ன; இதோ அதனை ஒரு கை பார்த்து விடு கிறேன்" என்று மிக்க அவசரத்தில் தமிழைப் படித்து முடித்தவரன்று. முடிவற்ற தமிழைப் படித்து முடிப்ப தென்பது நகைப்புக் கிடமன்றோ? முருகேச பிள்ளை புலமை மிகுந்த உள்ளத்தவரா யிருந்தபடியே தமிழ் கற்கும் மாணவனாகவே என்றும் இருந்தார். கண்ணிழந்த சிதம்பரப்பிள்ளை தமிழைப்பற்றுக்கோடாகக் கொண்டமை யால் கலக்கமுறாது என்றும் மகிழ்வுடனும் சுதந்தரத்துட னும் வாழ்ந்தார். வாதநோயாற் பீடிக்கப்பட்ட முருகேச பிள்ளை காலில் வாதம் பிடித்தும் (குஞ்சித பாதராய்) சமய வாதபேத மாயங்கடந்த சிவம்போல அயரா மகிழ்வுடன் என்றும் வாழ்ந்தார். இவ்விரு பெரியாரையும் உடலின் துன்பங்கள் பிறருக்குப் பாரமாக்காது நன் மாணவர்களை இவர்தம் பாரமாக்கி விட்டன.

அவசியம் அவசியமாகத் தமிழைப் படிக்காது முருகேச பிள்ளை அலசி அலசியே தமிழைப் படித்தார். கம்ப ராமாயணத்தின் கடைசி ஒற்றை தெரிந்த பலருக்கு பாவம் (அவர் செய்த பாவத்திற்குப் பிறர் என் செய்வது) மதுரைக் கலம்பகமோ குதிரைக் கொம்பு. சபைகளில் எழும்பிக் கம்பனிற் பிழை கூறிக் கச்சியப்பனிற் குறை சொல்லி நன்கு கல(ம்ப)கம் செய்வர். ஏதோ ஒரு வகை யில் கல(ம்ப)க ஆற்றல் பெற்ற இன்னவரை எவர்தாம் குறை கூறமுடியும். எடுத்தவுடனே கம்பராமாயணத்தை விரித்து (பாடல்களுக்குப் பொருளுள் தெரியாமலிருந்தும்)

ஆராய்ச்சி முடிபெல்லாங் கண்டு கம்பனேடு இராமனுக் குஞ் சேர்த்துக் கடைக் காப்புப் பாடும் இளைஞர் மிகுந்த இக்காலத்தில் தமிழ் நூல்களை எங்ஙனம் நாம் கற்க வேண்டும் என்பதை நமக்குக் கற்பித்துச் சென்றவர் இப் பெரியார். முடிபு கண்டறிந்து கொண்டு படிக்கத் தொடங்காது,படிக்கத் தொடங்கியே முடிபற்ற தமிழிலக்கி யங்களின் முடிபினை ஒரு சிறிது கண்டறிய விழைந்த இந்த அறிஞர் இளைஞருலகக் கல்விக்கு நல் விளக்காகத் துலங்கினர். முருகேச பிள்ளை நிகண்டு கற்று, இலக்க ணத்தோடு அந்தாதி கலம்பகம் உலா எனும் சிறு பிரபந் தங்கள் முறைப்படி கற்று, அதன்மேல் கண்ணெனத் தகும் கம்ப ராமாயணமும் காஞ்சிப் புராணமும் காசி காண்டமும், கச்சியப்பர் திருவாய் மொழியுங் கற்ருர். கற்றவற்றை உளங்கொள மனத்திற் பதிக்க வல்லார் இவர் என்பதற்கு இவர் மாணவர் குழாம் இன்று சான்று பகருமாயின் திருக்கோவிலின் தூண்கள்கூட வாய் திறந்து பேசக் கூடுமாயின் சாட்சி கூற முன்வரும். கோவிற் றூண்களே சாட்சி பகருமாயின் விசேட புராண படன காலத்தில் இவர்தம் உரைநயங்கேட்ட நல்லறிஞர் செவிகள் சான்று பகர முன்வராத காரணம் யாதோ? வள்ளலொருவன் பகைவனெறிவேலாலிறக்க பாடுநர் நாவிலும் உளத்திலும் அவ்வேல் தைத்த முறையில் முருகேச மணியின் மறைவினை விளம்பிய பறையொலி யின் ஓசையால் இன்று அப்புண்ணியச் செவிகளும் கேட் குந் தொழிலும் பேசுந் தொழிலும் இழந்து விட்டமையே காரணமாம் என்க.

கந்தசிவன் கடிமலரிணையில் இப்பெரியாரின்
ஆன்ம வண்டு தேனுண்டு திளைப்பதாகுக!

பொ. கிருஷ்ணபிள்ளை

ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, பலாலி.

## தேர்ந்தனன் தேவன் !

1. வெள்ளைப் புதுப்பூ விரும்பும் பிராட்டி வியன்மலர்த்தாள்
உள்ளத் தலத்தே யிருத்திநன் கேத்திடு முத்தமநாள்
பிள்ளைத் திருக்கரத் தேடுகள் சேர்த்திப்பெருமைமிகப்
பள்ளித் தலஞ்சேர்த்த செல்வாவுன் பாதம்
பணிந்தனனே.

2. தேனார்ந் திலங்கிடும் வெள்ளைப் பிராட்டி திறம்விளங்க
ஆனா வெனச்சொல்லி ஆயிர மாயிரம் மாணவரைப்
பேனா பிடித்தெழு திப்பிழைக் கும்படிக் குய்த்ததிறற்
கானா முருகேச வாசா னுனையென்றோ காண்பதுவே

3. நீறே யிலங்கநன் நெற்றித் திருவிழி தானிதென்னு
மாறே திலகமு மார்ந்திலங் கச்சைவ நன்னெறிசேர்
ஏறே யெனத்திகழ்ந் திட்ட முருகேசா வீசனடிப்
பேறே விழைந்தாய்நீ இங்கிருந் தேங்கவிப் பேதையரே

4. நானா ரெனக்குற்ற எண்ணங் களாரிந்த நானிலத்தே
ஊனா ருடலம் வளர்ந்துந்தா னுவதென் றுற்றுணர்ந்து
கோனா ரடியிணைக் காட்டிப் போதெனும்கொள்கைசெரிப்
போனாரிங் காற்றிய தொண்டினுக் கீடென் புகலுவதே

5. கந்தப் புராண வுரைநயம் காட்டிக் கவிதைநயம்
சிந்தப் பிரசங்க மாரியுஞ் செய்து செழிப்புறவே
சொந்தத் திறத்தான் வளர்த்திவை நற்கல்வி
சொல்லியசீர்
நந்தாப் புகழுடை யோனெம் முருகேச நற்குருவே

6. தேவாதி தேவன் அருட்பெருந் தோன்றல்
திருக்கதையை
பாவான் விரித்துநன் கோதிய கச்சி பரிசறிந்து
நாவா லுரைத்திட வல்லோர் பலரையும் நாடியின்றத்
தேவாதி தேவனும் தேர்ந்தான் முருகேசதேவனென்றே

—கு. பெரியதம்பி
ஆசிரியர்.

## மூதறிவூட்டு பண்டிதனே

(பிரமஸ்ரீ ச. சோமசுந்தர ஐயர் அவர்கள்)

### வெண்பா

சீரார்மன் மதவருடஞ் சேர்தனுமூ முவெட்டிரவி
யோரே காதசிபின் னேழ்பக்கம்—பேராரும்
முருகேச பண்டிதனுர் மூவுலகு மேத்தரனுர்
தருபேறு பெற்றிருநாள் தான்.

### எழுசீர் விருத்தம்

சீரியாழ்ப் பாணப் புலோலிதெற் கதனிற்சிறந் திருசைவவே
ளாளர்
நேரிய மரபிற் கணபதிப் பிள்ளை நேரியனுெத்ததோர்
தலைவன்
சாரியற் கற்பிற் சிவகாமி யம்மைதன்னை வேட்டியற்றிய
தவத்தால்
ஊரினர் மதிக்கப் பிறந்திடு பெரியோன் பேர்முருகேச
பண்டிதனே.

இன்னவன் பெருமை யித்துணைத்தென்ன வியம்பிட
முடியுமோ முடியா
நன்னயக் கல்வி நவையறக் கற்றேன் நாடியே சங்கநூல்
முழுதும்
உன்னத முறையிற் கற்று மாணவருக் குரைத்திடும்
பெருமைசால்குரவன்
பன்னருஞ் சைவ சித்தாந்த நூல்கள் பான்மையிற்
கற்றதோர் பெரியோன்

செந்திரு நிகரு மிலட்சுமிப்பிள்ளை தெரிவைக்குநன்
மணவாளன்
வந்திடு மிலங்கை யரசினர் கல்விமல்கிடு நிலயத்தின்
மேன்மை
தந்திடு முத்தியோகத்தி லிருக்குந் தருகணபதிப் பிள்ளை
தானும்
சிந்தனை தெளிந்த திருநாவுக்கரசும் வந்தனை செய்திடு
தந்தை.

கந்தநற்புராணம் திருத்தொண்டர்புராணம் கசிவுள திருவிளை
யாடல்
முந்திடு சபையில் விரிவுரையோடு மொழிந்திடுவல்
லமையாளன்
பந்தமில்சைவப் பிரசங்கம் பலரும் வியந்திடச் செய்திடு
புலவன்
சந்தமார் பாக்கள் பலபல செய்வோன் தகுமுருகேச
பண்டிதனே.

கவிக்கூற்று

நந்தமிழ் நாட்டில் புலவர்கள் பல்லோர் நாளுலந்தரனடி
புகுந்தார்
முந்துறு மன்ப ! முருகேசப் புலவோய் ! மூதறிஞூட்டுபண்
டிதனே !
நுந்தமர் யாரும் நண்பராம் நாமும் நுவலருங் கவலையின்மூழ்க
இந்தமா நிலத்தை விடுத்தரனடியி லின்புறச் சென்றனை
யந்தோ !

இன்புற வண்ணிச் சென்றனையாயினிதமுற வுன்றவமனையும்
மன்பொரு மகாரும் மற்றுளவுறவோர் மறந்திடா மாணவர்
பலரும்
அன்புறு மயலார் யாவருங் கவன்றே யகமது
வாடுதலழகோ
உன்பிரிவாற்ற லரிதரிதம்மா வுயர்முருகேசபண்டிதனே.

# பொல்லாத மனிதன்!

## (சோம. அம்பலவாணன்)

மேளதாளத்தோடு வீதிவழியே சென்று கொண்டிருந்தது ஊர்வலம். வானைப் பிளந்துகொண்டு வெடிகள் புகை மண்டலத்தைக் கிளப்பின. பாதை யோரத்திற் பலர் குழுமி நின்றனர். கடைசியாக அக் கூட்டம் அத்தபாற் கந்தோரை அடைந்து விட்டது. அன்று அத்தபாற் கந்தோர் திறப்புவிழா. விழாவிற்குத் தலைமை தாங்க வேண்டியவர் கனம் தபால் மந்திரி ஒருவர். அவர் தமிழர்.

கூட்டம் ஆரம்பமாகியது. மந்திரியார் தன் உரையை நிகழ்த்தத் தொடங்கினார். இரண்டு வசனங்களைக் கஷ்டத்தோடு குறைத் தமிழில் பேசி முடித்தார். மீண்டும் அவர் கூறினார், "நான் அதிகம் தமிழில் பேசமாட்டேன். ஆகையால் ஆங்கிலத்திலேயே தான் உரையை நிகழ்த்த எண்ணியுள்ளேன்" என்று கூறிவிட்டுத் தொடந்து பேசினார். தமிழ் மந்திரியானமையால்விழாக் காரர்கள் மொழிபெயர்ப் பாளர்களைக்கூட ஆயத்தம்செய்ய வில்லை. சபையிலிருந்தவர்களில் ஒருவராவது முன்வந்து மொழி பெயர்க்க முடியவில்லை. மந்திரியார் ஆங்கிலத்திலேயே உரையை நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

அத் தருணத்திலே, ஏறக்குறைய ஐம்பத்தைந்து வயதிருக்கும். நீண்டு கோலிய தாடி; காதில் இரு சிறிய கடுக்கன்கள்; நெற்றியிலே பிறைச் சந்திரனைப் போட்டி போடும் திலகம்; வெண்மண்டை, சிறிய குடும்பி—இவைகளைத் தாங்கிக்கொண்டு, அத்தோடு கையில் ஒரு ஊன்று கோலையும் பிடித்துக்கொண்டு, நீண்ட தாடியை உருவியவாறே ஒரு உருவம் பின்வருமாறு பேசியது. "ஐயா! தாங்கள் பேசுவது ஒன்றும் புரியவில்லையே! இங்கு குழுமியிருப்பவர்கள் எல்லாரும் தமிழர்கள். தயவுசெய்து தமிழிற் பேசுங்கள்.

சபையிலே ஒரே குசுகுசுப்பு. ஒரு சிலர் அவ்வுருவத்தைப் பார்த்தனர். மந்திரியார் விறைத்து விட்டார்.

தமிழ் வளரும் புலோலியிலே, மாட்டிக் கொண்டுவிட்டார். ஆம்! முருகேசு வாத்தியார் ஐம்பத்தைந்தாம் கிழட்டு அகவையிலே கன்னித் தமிழின் உணர்ச்சி உவகையால் எழுந்த இளம் கர்வத்தை யாரும் கண்டு ஆச்சரியப் பட்டனர். முதுமையான வயதிலே தோற்றிய புத்துணர்ச் சியைப் பார்த்துப் பலர் பயந்தனர். இச் சிறு சம்பவத்தை நான் ஏன் கூறினேன் என்றால், அவர் தமிழின் மேல் வைத்த ஆழ்ந்த பத்தியையும், தள்ளாத வயதிலும் தமிழகத்தைத் தட்டி எழுப்பி, ஆங்கில மோகத்தில் அடிமைப் பட்ட தமிழினத்தை விடுதலை செய்யப்பண்ணி, மறுமலர்ச்சி உண்டுபண்ணுவதற்காக ஊக்கம் எடுத்தார் என்பதைக் காட்டவே.

மேடையில் இவர் பேசும்போது தனி ரகம். நகைச் சுவையாகப் பேசுவார். பல இடங்களில் இருந்து உதாரணங்களைத் தொகுத்துப் பேசுவார். காலத்தோடு போவார். பழமையிற் புதுமை கலப்பார். பேச்சாளர் களை அவர் தலைமைப் பீடத்திலிருந்து அறிமுகப்படுத்தும் போது மிகவும் வேடிக்கையாய் இருக்கும். பழைய புராண உலகத்திற்கும், புதிய விஞ்ஞான உலகத்திற்கும் இழுத்துச் செல்வார். பேசும்போது சேக்கிழார், கம்பன், வள்ளுவன், இளங்கோ, மாணிக்கவாசகர் முதலியோரைத் துணையாக வைத்துக்கொண்டே பேசுவார்.

பள்ளிக்கூட மாணவர்கள் அவரைப் பொல்லாத மனிதர் என்று கூறிக்கொள்வர். அவர் வைத்திருக்கும் துவரம் கம்பு பல மாணவர்களின் மேற் பதம் பார்த்திருக் கிறது. படிப்பிக்கும் போது புராணக் கதைகளைக் கூறுவார். கேலிக் கதைகள் சொல்லிச் சிரிக்க வைப்பார், இலக்கணம் படிப்பிக்கும் போது வெகு இலகுவான முறையிலே இடையிடையே நகைச்சுவையோடு கூறி விடுவார். நெற்றியிலே விபூதி பூசாதவர்களுக்கும், திலகம் இட்டுக் கொள்ளாதவர்களுக்கும், தேவார திருவாச கம் படியாதவர்களுக்கும், மோசமாக அடிப்பார். "பாவி மனிதன்" "பொல்லாத மனிதன்" என்று மாணவர்கள் மனத்துக்குள் திட்டிக்கொள்வர். ஆம், மாணவர்களுக்கு ஒரு பொல்லாத மனிதன்தான்.

ஒரு புறம் பாடசாலை. மறுபுறம் கோவில்களுக்குப் புராணத்திற்கு உரை கூறப்போதல். இடை நேரங்களில் முதியவர்களுக்குப் புராண விளக்கம். அவர் புராண உரை கேளாத கோவிற் தூண்கள் இல்லை. மிகுதியான நேரங் களிலே சேக்கிழார் சுவாமிகளோடு சிறிது உரையாடல். பொதுவாக அவர் தொழில் "பணி செய்து கிடப்பதே."

தன் இளம் வயதிலே ஆசிரியத் தொழிலைத் தொடங் கினார். அரசமரத்தின் கீழ்ப் படித்த மாணவர்களை, தன் சொந்த முயற்சியாலும், ஊக்கத்தாலும், ஆதரவான ஓர் பாடசாலையாகக் கட்டப் பணி செய்தார். விடிந்த விஞ்ஞான உலகிலே வாசிகசாலை யொன்றை நிறுவினார். புராணங்களுக்குப் புத்துரை கண்டார். என்றுமே தமிழுக்காகத்தான் வாழ்வைத் தியாகம் செய்தார்.

இவர் "பரீட்சை கொடாத பண்டிதர்." புலவரேறு தனது அறுபதாவது நிறைவு ஆண்டு விழாவிற் பொன்னுடை போர்த்துப் பேசும் போதுகூட பொக்கை வாயால் புதுக் கன்னித் தமிழிற் பேசும்போது கூட இருந்தவர்களே பிரமித்து விட்டார்கள். தள்ளாத வயதிலும் தமிழ் நாட்டிலோர் தாரகையாக விளங்கினார்.

சென்ற ஆண்டு தமிழகத்திற் பல தாரகைகள் மாண்டு விட்டனர். கல்கி, கவிமணி, திரு. வி. க., சோம சுந்தரப் புலவர், டி.கே.சி. இவர்கள் மாண்டு போனதால் தமிழகமே கலங்கிவிட்டது. அதோடு இம் மணி வானுலகம் சென்றதைத் தமிழுலகம் எப்படிச் சகிக்கும். ஆம்! இத்தனை அறிஞர்களும் ஒன்று கூடி வானுலகில் எத்தனை ஆராய்ச்சிகள் செய்துகொண்டிருக்கிறார்களோ!

## பெரியார்கள் அவையத்து மணி

### கட்டளைக் கலித்துறை

பெற்றநற் கல்வி பிறர்கொளச் செய்யும் பெரும்பணியில்
சற்றுந் தளர்வின்றிச் சீர்சால் புராணச் சிறப்புரைத்தும்
கற்றிடு சாலைக ளாக்கிடக் காரண கர்த்தனும்
நற்றொண்டு செய்தான் புலோலி முருகேச பண்டிதனே

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கந்தப்பு ராணத்து உரைகூற ஊரிலே கற்ருேர்கள்
[பலருண்டுகாண்
அந்தப் பெரியார் களவையத்து மணியான அண்ணலே
[முருகேசனே
இந்தப் புவிவிட்டு ஏகினுயாயினும் இறவாத வுன்றன்
[புகழால்
கந்தப் புராணத்து உறைகேட்போர் காதிலே கணீ
[ரெனும் நின்னதொலியே

—பண்டிதர் சி. குலசேகரம்

# இது சரியோ கழருயண்ணு !

(க. பொன்னம்பலம் ஆசிரியர் கூறியவை)

ஒருநன்றி செய்தாரை உடலுமாவி, உள்ளளவும் நினை
யென்று உலகம் கூறும்
பெருநன்று நாடோறும் புரிந்த நின்னைப் பிரியவோ
மறக்கவோ முடிதலெங்ஙன்
திருநின்று விளையாடுன் வதனங்காணில், தீராத கவலை
யெல்லாம் தீர்ந்துபோகும்
தருவென்று நிழல்தந்த முருகேசண்ணு, தமியனை நீ
கைநெகிழ்ந்த தர்மமென்னே. 1

கதிர்காணும் தருணமதில் வெள்ளம்வந்து, களமாக்கி
யழித்ததொரு பயிரைப் போலும்
எதிர்காலத் தெமது முன்னேற்றம் நின்பால்; இருக்கு
மெனுமுணர்ச்சியை நீ கொள்ளை கொண்டாய்
மதிமுகநின் வசீகரா என்னமாற்றம், மாநிலத்தில்
நினக்கிழைத்த பிழைதானென்னே
கதியிழந்த நிலையிலெமைத் தவிக்கவிட்டு, கதிபுகுந்தா
யிதுசரியோ கழரு யண்ணு! 2

தென்பரத கண்டமதிலுமைத் தெரிசிப்பபேனே; வட இலங்கை
தீவதனில் காணுவேனே,
என்னிலத்திலுன்னை யினிக்காண்பேனண்ணு; என்ன
விதத்தெமை மறந்தா யறிகிலேமால்
அன்னையமுதிழந்த வொரு சேயைப்போலும்; ஆழ்கட
லிலமிழ்ந்தமரக் கலத்தைப் போலும்
இன்னலுற வைத்தெங்கு ஏகினுயோ, இனியெமக்கார்
துணையுண்டு இயம்புவாயே.

# அன்பு மலர்

(ஆசிரியர் திரு. க. முருகேச பிள்ளை அவர்கட்கு அவரது மாணவன் வே. சரவணமுத்து ஆசிரியர் சாத்தியது)

செந்தமி ழிலக்கி யங்கள் திருப்புரா ணங்கள் தெய்வப்
பைந்தமிழ்க் கவிகள் நால்வர் பாக்கள்தே வாரப் பண்கள்
சொந்தமே சுரக்கும் வாயோய்! தொன்னெறி முறைவ ழாது
வந்தனை வாழிபா டாற்றும் வண்மையோய்! தண்மையாள! 1

புல்லறி வகற்றி உண்மை புகட்டுவோய்! புலமை சான்ற
பல்லறி வாளர் தம்மைப் பாரினுக் களித்தோய்! பாட்டின்
சொல்லறி வுடையோய்! நான்கு சுருதியினெறியில் வாழ்வோய்
கல்லறி வுடனே ஞானக் கருத்தறி புலமை கொண்டோய்! 2

சிரித்தநன் முகத்தோய்! சைவத் திருமறை பயிலும் நாவோய்!
தரித்தபுண்ட ரத்தோய்! தாணு தன்னடிக் கன்புசெய்வோய்!
வரித்தமெய் உருத்திராக்கம் வயங்குகந் தரத்தோய்! வெண்மை
பரித்தவஸ் திரத்தோய்! மக்கட் பண்பினு லுயர்வு
[பெற்றோய்! 3

கற்றவர் நயக்குங் கந்த புராணத்தின் கருத்தை யெல்லாம்
முற்றவே விளக்கிக் கூறும் மூதறிவாள! நெஞ்சிற்
செற்றமில் செம்மையாள! சிந்தனு சதுர! சீல!
அற்றவர் உற்றார் யார்க்கும் அன்புசெய் அறத்தின் மைந்த! 4

சாரதா பீடவித்யா சாலையில் எமக்குக் கல்வி!
சீரதா யுதவி வைத்த சிறப்பினை மறக்கல் ஆமோ?
நேரதா யெவரு மில்லா நிறைமதி யுடையோய்! உம்பர்
ஊரதாமுறையுள் புக்காய் உன்னுருக் காண்ப தென்றோ?

வெண்பா

சற்குணத்தின் வைப்பே சமநோக்கின் தாயகமே
விற்பனத்தின் கொள்கலமே வித்தகனே—கற்போர்
திறந்தெரிந்து சேவைபுரி செம்மலே நின்சீர்
மறந்திருக்க லாற்றோம் மனத்து.

# புல்லரையும் புலவராக்கும் தாள்

(கந்த. முருகேசன்)

## முன்னிலைப் பராவல்

மலர்கருவிக் கலைகளுடன் புராண மாண்பு
மலியுமிதி காசமெழிற் சங்கப் பாட்டு
மலர்பெரிய காப்பியங்கள் நீதி நூல்கள்
ஆயவிலக் கணஞ்சேர்ந்த நிதிக் கூடானாய்
பலர்பெரிய பண்டிதர்க ளனுக வஞ்சும்
பாரியசித் தாந்தசிவப் பரவை தோய்ந்தாய்
புலர்செய்திரு ளகற்றுமெற்போ லுள்ள னீக்கிப்
புகுகற்பார்ப் புரந்தமுரு கேச வெந்தாய். 1

இந்தவுல கிற்புலவோர் தமிழுண் டின்பார்
எவ்வுணவுங் கைத்தொழிக்க வூட்டி னயால்
அந்தவுல கிற்புலவோர்க் கமுதங் கைக்க
அருந்தமிழி லார்சுவையைச் செவிவா யுண்ண
நுந்தமது துணிபதனாற் போயி னயோ
நொந்தவர்க ளறியாமை வறுமை யோட்டி
நந்தலிலா விழுச்செல்வ மீயும் வள்ளால்
நாயேனை யாண்டமுரு கேச வண்ணல். 2

செந்தமிழ்க்குக் குழைந்துருகி யருளை யீவன்
சிவன்ருய்போ லெனவுரைப்பா யவன்ரு னல்கு
மந்தமிலா வீட்டின்பந் தமிழின் பாமோ
ஆமெனிலச் சிவன்சங்கப் புலவ னமோ
இந்தவுல கினுந்தெற்கே நோக்கு வானே
எனத்துணிந்தா யவன்செவிச்செந் தமிழ்ந யத்தை
நந்தலிலா தேவிரிக்க நடந்திட் டாயோ
நாயேனை யாண்டமுரு கேச வண்ணல். 3

ஒருவிளக்கி லேற்றுபல விளக்குப் போல
உன்னாலே விளக்குற்றார் பலரா லையா
திருவிளக்கு முன்னாலே கலையி லேறித்
தேறியவ ராசிரிய ரெண்ணப் போமோ
அருவிளக்கா முனையிழந்தே வாடு கின்றார்
அலைகடலுந் தோற்றிடுநின் னார்மா ணாக்கர்
பொருள்விளக்கி யென்போல்வார் மாசு நீக்கிப்
புகுகற்பார்ப் புரந்தமுரு கேச வண்ணால். 4

தமிழ்சைவ மாமணிகள் தோளிற் கொண்டு
தக்கவிலக் கணத்தரள மாலை சூடி
அமிழ்தனைய காப்பியமாங் கடற்கு ளித்தே
ஆடையாப் புராணமிதி காசந் தாங்கி
குமிழ்பிடியார் உடைவாளாத் தருக்கங் கட்டிக்
கூறுசைவ சித்தாந்த வாரம் பூண்டு
இமிழ்சங்கப் பாட்டெனரி யணையி லேறி
இனிதுநீ வீற்றிருக்கும் எழில்காண் பேனோ. 5

சீரியதென் புலோலியப்பேர்ப் பொருளுக் கேற்ற
சிறப்புறவே செய்தடையுங் கற்போர் தம்மை
நாரியல மக்களென மதித்தே ஞால
நாடுமெழிற் கல்வியுடன் ஒழுக்க மேன்மை
யாரியல வமைந்திடச்செய் தவர்கண் மென்மே
லாக்கமுறல் கண்டுகளித் துலக மேத்தும்
ஏரியல வைத்த மகி ழிருக்கை யேறி
இனிதுநீ வீற்றிருக்கு மெழில்காண் பேனோ. 6

என்போன்மா ணாக்கரிடை யன்பு தோன்றும்
இன்றுயாம் இல்வாழக்கைத் துணைவி தோன்றும்
தன்போலத் தமிழ்தோன்று மக்கள் தோன்றும்
சார்ந்திடுமா ணாக்கரெலா மேலே தோன்றும்

அன்பூற்றுக் கலைகாட்டு மமைதி தோன்றும்
　　அலந்தவர்தந் துயர்துடைக்கு மருளுந் தோன்றும்
இன்பூற்றுந் தமிழ்நெஞ்ச மினிது தோன்றும்
　　என்குருவா முருகேச விறைவ னார்க்கே. 7

நெற்றியிலே திருநீற்று நிலவு தோன்றும்
　　நிகர்மிடற்றி லக்குமணிக் கோலந் தோன்றும்
செற்றவர்க்கு மன்புசெயுஞ் சீலந் தோன்றும்
　　திகழுதமிழ்த் தேனொழுகும் வாயுந் தோன்றும்
கற்றவரை யேவளைக்குங் கையுந் தோன்றும்
　　கருதுமர கரவென்பார் கூட்டந் தோன்றும்
எற்றலையிற் சூட்டுதிரு வடியுந் தோன்றும்
　　என்குருவா முருகேச விறைவ னார்க்கே. 8

## படர்க்கைப் பராவல்

உரைசொலுங்கால் இதிகாச புராண மாதி
　　ஒப்பிலியா நக்கீரர் நச்சர் சேனா
வரையர்பரி மேலழகர் யாரு மெச்சும்
　　மன்னுமுரை யாசிரியர் ஒன்று சேர்ந்து
தரைமீது வந்தனரோ நூல்செய் தோர்கள்
　　தாமிவனாய் வந்தனரோ வெனவி ரிக்கு
முரைநயத்தைச் சுவைத்தலிழந் துலகம் வாட
　　உயருமுரு கேசனகன் றிட்ட தென்னே. 9

கற்க வருமெனைப் போல்பவர் தம்மைக் கனிந்துருகி
யற்புட னாதரி தாயா மிவன்மனை யாண்மனைமாண்
பிற்கோ ரிலக்கிய மாயினள் மக்கள் பெறத்தவமென்
னுற்றான் தமப்ப னெனுமுறை காட்ட வுவந்தனனே. 10

உவந்தவன் மாணவ ருள்ளமுங் கற்றவ ருள்ளமுடன்
தவந்தரு பெண்மையில் லாகு மிலக்குமித் தாயுளமும்
இவண்டரி யாதுடன் செல்ல மகாரி னினையுளமும்
கவர்ந்தனன் கள்வன் முருகேசன் செல்லல் கருமமதே. 11

கருவிற் பிறப்பவர் யாருமிறந்திடல் காணுலகி
லொருவியப் பேயல வாயினு மிங்கிவ னேடியதாற்
றருகலை யாம்பெருஞ் செல்வப் புலோலி தனதரிய
திருவிளக் கொன்றை யிழந்த குறையினித் தீருவதே. 12

தீருவ தின்றெனி னும்மவன் போலச் செழுந்தமிழை
யாரு மறிய விளங்கதிர் நேர வெழுச்சியுற
ஓரு முணர்வினி லுய்த்தே தமிழொழுக் கோவிலமாய்ச்
சேருவ மன்ருன் பணியிற் சிறிதுளந் தேறிடவே. 13

நந்தமிழர் தவப்பேருய் வந்த தோன்றல்
நாடிடுதென் புலோலியொளி வளர்வி ளக்குச்
சுந்தரமார் கணபதிப்பிள் ளைவேள் நோன்பின்
துணைவிமணி யாலிலையீன் திருமால் கல்வி
நந்திடவே புற்றளைச்சா ரதாபீ டம்மென்
நல்லறிவுப் பள்ளிதனைத் தொடங்கு பேரோன்
அந்தவறி வாதித்தோ தயசங் கத்தில்
அரியாவிராப் பள்ளிவைத்தே தமிழ் வளர்த்தோன் 14

இந்தியநாட் டிற்றூத்துக் குடியின் வாய்ந்த
இனியசிவா கமசங்கத் தெய்திச் சைவ
நந்தலிலாச் சித்தாந்த நலம்ப யின்ருேன்
நாகலிங்க வித்துவான் நடத்தி வந்த
அந்தநல ஞானசித்தித் தாளை யன்னன்
அயனுட்டிற் செல்லவா சிரிய னுகி
முந்தவுல கப்போற்ற நடத்து மண்ணல்
முன்னுதமிழ்ப் பணிநிற்றல் தேறு வோமே. 15

ஒல்காத நல்லருள்சேர் முருகேச வாசிரியன்
சொல்லார கத்தியன்மா ணுக்கன்கா ணம்மானை
சொல்லார கத்தியன்மா ணுக்கனவ னுமாயின்
தொல்காப்பி யஞ்சொல்லுந் தோன்றலோ வம்மானை
தொல்காப்பி யங்கள்பல சொல்லினன்கா ணம்மானை. 16

தவமாரு நற்கலையான் தாவில்முரு கேசனவன்
சிவஞான பாடியஞ்சொல் திண்ணறிவ னம்மானை
சிவஞான பாடியஞ்சொல் திண்ணறிவ னுமாயின்
தவவுளிருட் டுறைசை யாதீனஞ் சார்ந்தவனே
தவவுளிருள் ஆதீனந் தாங்குவன்கா ணம்மானை. 17

கலக்கறுக்கு மாசிரியர் கண்ணுமுரு கேசபிள்ளை
நிலக்கணமச் சிவாய னினைப்பவன்கா ணம்மானை
நிலக்கணமச் சிவாய னினைப்பவனே யாமாயின்
இலக்கணக்கொத் தீந்தருளு மியல்பினனோ வம்மானை
இலக்கணப்பூங் கொத்துபல வீந்தவன்கா ணம்மானை. 18

முருகேச வாசிரியன் மூதறிவு தந்தருளுந்
திருவாசக கங்களுரை சீரியன்கா ணம்மானை
திருவாச கங்களுரை சீரியனே யாமாயின்
ஒருவாசி யேற்றங்கா ணெப்பிலியோ வம்மானை
இருவாசி யேற்றமுங்கா ணியல்பினன்கா ணம்மானை. 19

சொற்றமுரு கேசன்ருன் சொல்கட.வு ளாமெனவே
கற்றவரை யேவளைக்குங் கண்ணியன்கா ணம்மானை.
கற்றவரை யேவளைக்குங் கண்ணியனே யாமாயிற்
புற்றளைப்பள் ளியிற்கருணை பொழிவானோ வம்மானை
புற்றளைப்பள் ளியிலருணூல் பொழிந்தனன் காணம்மானை 20

தேனெ னிறையென் றிருந்தடியென் வாழ்வுதரு
கோனெ னரியகுணக் குன்றுகலை—மானென்
றிருவே புணருந் திருவாள னுகு
முருகேசன் ருளதனை முன். (வினுவுத்தரம்) 21

கல்வி தருமே கருத்திலிரு ளோட்டிடுமே
புல்லரையு நற்புலவ ராக்கிடுமே—சொல்லார்
திருவதனை யீந்திடுமே செந்தமிழ்த்தேங் கொண்டல்
முருகேசன் முண்டகப்பூந் தாள். 22

பெரியதேவனத்தாய்ச் சனசமூக நிலையத்தில் முருகேச வாசிகசாலைக்கும் இளைஞர் கழகத்திற்கும் "தமிழகத்தான்" கொடுத்த வாழ்த்தில், மறைந்த பேராசிரியர் க. க. முருகேச பிள்ளையைப்பற்றிய தொரு பா:—

அறியாமை யிருட்கடலிற் கிடந்தேன் றன்னை
யறிவெனுநற் கரைகாட்டி யுய்வித் தாண்ட
குறியாத கைம்மாறுள் ளத்தெம் வள்ளல்
குருநாதன் முருகேசன் றலைவன் ருள்கள்
சிறியேனுன் றலைசுமந்தே கூறும் வாழ்த்துஞ்
செப்பிடுநல் வாயுரையுஞ் சிறப்ப நின்றே
கிறியறுமற் றவன்பேர்வா சிகசா லைக்கோன்
கிளர்ந்திவணீ பல்லாண்டு வாழி வாழி

க. கதிர்காமர் (க. க. மு. வின் பெரிய தந்தை) அவர்களின் கல்வெட்டில் ஆசிரியரைக் குறித்துக் கந்த முருகேசன் சொல்லியது.

இலக்கியநல் லிலக்கணமே யிலங்கு பேழை
இனியசைவ சித்தாந்த மிருக்கு மில்லந்
தலத்திலுயர் புலோலிதமிழ்க் கலையி லாடித்
தழைந்திடவிந் நாளிலுழை சான்றோ னேன்
துலக்கமுறு முளக்கோயி றன்னி லென்றுந்
சொல்லுசிவ னிணையடியே துலங்கு சீரோன்
புலக்கணவர் போற்றிடுசீர்க் கார்த்தி கேயன்
புகல்மகனு முறையாகப் பொலிந்து ளானே

## அறிவாதித்தன் திரு. முருகேச பிள்ளை அவர்களின் மறைவு குறித்து

ஆசிரியன், பண்டித, பொன், சின்னத்துரை அவர்கள் கூறியவை

வெண்பா

மன்மதத்து மார்கழிநா லாறுரவி வாரந்தேய்
வுன்னியவே காதசிவி சாகத்தே—மன்னும்
அறிவாதித் தோதயனு மானமுரு கேசன்
இறைவனடி சேர்ந்தான் இயைந்து.

விருத்தம்

பொருவிலாப் புலோலி வேளாண் குலத்திடை புலமை
[சைவம்
இருபதாம் நூற்றுண்டின்முன் எழிலுடம் பெடுத்தா லென்ன
வருகண பதிப்பிள்ளைக்குப் பிள்ளையாய் வாய்த்துக் கல்வி
பெருகிட முருகேசப்பேர்ப் பிள்ளையும் பெரியனுனன்.

இலங்கைமா தன்னு ளீன்ற எண்ணிலாப் புலவரோடும்
நலம்பெறத் தமிழை யாய்ந்தும் நல்லுளம் நிரம்பானுகி
பலம்பெறப் பாரதத் தாய் படைத்தநா வலர்பா லாய்ந்து
வளம்பெறு கலை புலோலி வளம்பெறப் பொழிந்த கொண்டல்.

இனியதென் புலோலியூரில் இரண்டொரு குடிசை செய்து
மனிதரில் மனிதராக்க மாணவர் பலரைச் சேர்த்து
தனியுளம் அறிவை யுண்ணச் சாரதா பீடசாலை
துனியறத் தேங்காய் வெட்டித் தான் தொடங்கிய நல்
[லாசான்.

தம்மய லுளமா ணுக்கர் தறுதலை யாதல் நீக்க
இம்மியும் வீண்போ காதே இரவினிற் பாடசாலை
செம்மையில் நிறுவி நல்ல புராணசித் தாந்தம் நன்னூல்
தம்மினு முயர்ந்த நூல்கள் பலவுமே தானு யீவோன்.

ஊருக்கே உபதேசித்தேன் உனக்கல்ல கண்ணேயென்று
சீருறு மனையா ளோடு செப்பியூ னுண்பார் நேரான்
நேரிய உபதேசம்போல் நினைத்தவை செயலிற் காட்டும்
கூரிய மனவாக்காதி சிவநெறி காட்டி வாழ்ந்தோன்.

நாரத னிவன்தானென்று நாரத முறவே பேச
நாரத வடிவம் பெற்றே நாடகம் நடித்த செம்மல்
பாரதமுறவே செய்து பாரதி யிவரோ வென்னப்
பாருளா ரெண்ணும் வண்ணம் முத்தமிழ் பண்ணும்
[தொண்டன்.

நெய்யெரி விளக்கைச் சூழ்ந்து நிலத்துப்பத் மாசனத்தே
உய்வுறும் வழிகள் காண்பான் உயர்வுறு புராணமோதி
மெய்யெலா முணர்ந்து ஞானம் மாணவர்உறுதல் செய்வான்
ஐயமில் இதுவே அந்நாள் குருகுலக் கல்வியாமால்.

கார்த்திகே சுபாத்தி யாயர் கந்தநற் புராணத்துக்கு
வார்த்திடும் உரைகள் கொள்ள வளர்ந்திடும் சனங்கள்
[கூட்டம்
ஆர்த்திடு முரைகள் யாவும் அறிஞர்கள் உளங்கட்கப்பாற்
சேர்த்ததாய் புதிதாய்ப் பல்வேறுரைப்பினில் தொனிக்க
[வைப்பர்.

பொன்னக மின்னதென்று வாதித்த புனிதன் நல்லோர்
தன்னக மிதுதா னென்று நூல்களில் தெரித்துக்காட்டும்
வன்மையன் செஞ்சொல் பூத்த பிரசங்கி சைவசீலன்
சென்றன னென்ற போதே சிதைந்தது ஈழநாடே.

கேசரி கரனென் றின்ன பெயரொடு கிழித்துக் கட்டும்
நேசரி னியற்கை விஞ்சி நிறையுரை தழைத்துக் கண்ட
தேசுக ளுரைக்கு மீழ மணியெனும் செய்தித் தாளை
ஆசையோ டெவரும் கொள்ள அமைத்தவா சிரியனுவான்.

அந்தரா தித்தன் வையப் புறத்துள விருளை நீக்க
அந்தரத் தோடிச் சென்றும் இன்னமும் அழிந்ததில்லை
சுந்தரத் தமிழும் சைவமெனு மிரு சுடர் பரப்பி
மந்தருள் ளிருளை மாய்த்து ஒளியிடு மறிவாதித்தன்.

வள்ளுவ ரெச்சிலின்று உலகெலாம் வாரியுண்ணும்
உள்ளுறு நச்சரெச்சி லுணுந்தமி ழகம் விளங்கக்
கொள்ளுறு முருகேசன் செய் புத்துரைப் புதுமை யெச்சில்
மொள்ளுறு மாணுக்கர் பால் இனியுளோர் கொளவைத்திட்
[டான்.

புலவரி னெலிமிக் கந்நாட் டொடங்கியே புலோலிதன்னில்
இலகிய புலவர் வம்சம் இசைந்துமேற் றொடர வேண்டி
வலமுறத் தமிழகத்தில் கார்த்திகே சென்னும் பேரன்
நிலவிடு மாறுகந்த முருகேசப் பேரனுன்.

எத்தனை சபைகள் கண்டீர் எத்தனை வாது வென்றீர்
எத்தனை சிறுர்கள் கண்டீர் எத்தனை நூல்கள் கண்டீர்
எத்தனை புதுமை பெற்றீர் எத்தனை மதிப்பில் மிக்கீர்
எத்தனை நிலையினீர்விண் ணின்றுவிட் டுயர்ந்திட்டீரே.

பெற்ற மக்கள் தாம்புலம்ப பெருத மக்கள் சீறியழ
கற்றமக்கள் கலங்கிட கருதமக்கள் கதறியழ
கற்ற மக்கள் மக்கள்மக்கள் அவர்தம்மக்கள் இம்முறை
பெற்றகல்வித் துறைப்பேரர் பீட்டர் கரைந்து கரைந்தனரே.

ஆலமரந்தா னழிந்திடினும் அதுவே விடுத்த விழுதுபல
சீலம் பெற்று நிழலீந்து செழித்துக் குளிர்ந்து பரவுதல்போல்
காலம் நிறைந்து மறைந்தமுரு கேசன்சீடர் கிளைகளெலாம்
தாலம் முற்றும் கலைநிழற்றும் கரைதல் விடுமின் சகத்தீரே.

செல்வம்நி றைந்து அற நிறைந்து இன்பம்நிறைந்து
[வீட்டுரிமை
இல்லத் தறத்தே பெறநிறைந்து எங்கும் தமிழர் நிறை
[நிறைந்து
கல்விக்குன்றும் முருகேசன் கற்றூர் கிளைஞர் கிளைநிறைந்து
வெல்லும் தமிழ்நாட் டுரிமைநிறை வெற்றிகண்டே
[நிறைகுகவே.

—✦—